# 12. விதைத்தவன் உவமை

நான் ஒரு கமக்காரன். ஒருநாள் விதைப்பதற்காக வயலுக்குச் சென்றேன். விதைக்கும்போது சில விதைகள் வழியோரத்தில் விழுந்தன. பறவைகள் அவற்றை உண்டு விட்டன.



சில விதைகள் பாறைகளில் விழுந்தன. அவைகள் முளைத்தன. ஆனால் கதிரவனின் வெப்பத்தால் கருகிப் போயின.

சில விதைகள் முட்செடிகளின் இடையே விழுந்தன. அவைகளும் முளைத்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கி விட்டன.

சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன.
அவைகள் நல்ல விளைச்சலைத் தந்தன.
சில விதைகள் அழிந்தாலும்,
தேவபிதா நல்ல பலனைக் கொடுத்தார்.
இதனால் அதிகம் மகிழ்ச்சி அடைந்தேன்.



பலன் கொடுப்பீர் - நல்ல
பலன் கொடுப்பீர்
பண்பட்ட நிலம் போல்
பலன் கொடுப்பீர்.